உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீசாம்பாயபரப்பிரம்ஹணேநம:.

சித்தாந்தரத்நாகரம்.

ஆளுடையபிள்ளையார்

வெண்பாவந்தாதி.

இஃது

சித்தாந்தத்தலைவர்க்குத்

தொண்டுபூண்டொழுகும்

சூளை,

சோமசுந்தரநாயகரவர்களால்

இயற்றப்பட்டது.

MADRAS:

PRINTED AT THE MEMORIAL PRESS,

No. 39, THUMBOO CHETTY STREET,

28th February 1881.

Registered Copy-Right.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீஸம்பந்ததீர்த்தசரணும்பாம:.

சித்தாந்தரத்நாகரம்.

ஆளுடையபிள்ளையார் வெண்பாவந்தாதி.

காப்பு.

பொன்பூத்த செங்கமலப் பொய்கைப் புகலியில்வாழ்
மின்பூத்த வேணி விமலனிடம் - மன்பூத்த
அம்பிகைபாலுண்டோ னந்தாதி யான்புகலத்
தும்பி முகன் பொற்ரு டுணை.

நூல்.

சீகாழிச் சம்பந்தன் சேவடியை யெஞ்ஞான்று
மோகாடவியொழிந்து முன்னுவார் - நாகா
பரணனடி ஞானம் பற்றுகிற்பா ரொன்றிங்
குரைசெய்வார்வேத முணர்ந் தோர். (க)

உணர்வரியா னம்மை யுமைமுலைப்பா லுண்ட
துணைவனருட் காழிவரு தோன்றல் – எனுமடியர்
பாலுடையா னென்றன் பவமகலத் தந்தருளுங்
காலுடையானெங் காவலன். (௨)

வலமாழியான்பங்க யாதனனும் வாழ்த்தி
வலமாகவந்து வணங்க – வலமா
வரங்களருள்காழிவரு வள்ளலடி யென்றன்
சிரங்களமாய்த்தே சேருமே. (௩)

சேர்வார் சிவகதியிற் சீகாழிச் சம்பந்தன்
ருர்மாமலர்ப்பூஞ் சதங்கைசெறி – சீர்பாதம்
போற்றுவார் புல்லறிவிற் போந்து தடுமாறுமெனை
யேற்றுவார்தம் மடியிலே. (௪)

இலதென்னுமாயையாமிவ்வுலகைமெய்யென்
றலையாகினைந்து மறந்தாழும் — புலையேன்றன்
நீங்கலச் சம்பந்தன் சேவடிக்காளானவர்தம்
பாங்கடைதலன்பெனக்காம் பார். (௫)

அன்பில்லார்முத்தி யடைவரேர் வித்தொழிந்த
தென்புகல வுண்டிங் கிசையுமேல் — அன்பொழிய்
முத்தியடையு முறையுண்டாங் காழியில்வாழ்
அத்தனருணுடுவமியாம். (௬)

யாமாருடலாரிருமையுமிங் கொத்துறவே
தாமாச்சமையுந் தரமிலதே — கோமானே
யென்றடியரோத்து மெழிற்காழிச் சம்பந்தா
வின்றடியேனுக்கிங் கிசை. (௭)

இசைவாதுவென்ற விறைபோடிரண்டற்
றிசையவருள விரங்காய் — இசைமலியு
நல்லசீகாழிவரு ஞானசம்பந்தாநீ
புல்லெல்லை யண்டாதவித்தைப் பொய். (௮)

பொய்வேடக்காரர் புகலுமவநெறியே
மெய்யாகநம்பிவிதிர்விதிர்த்திங் — கையமடைந்
தாடியுழன்றோடி யலையுமெனைச் சம்பந்தா
வாடியருணுடி மகிழ்வால். (௯)

ஆய்மறையாக மாதிகலையனைத்துந்
தூயபரசிவனைச் சொல்லுமுயர் — வாய்மைநெறி
சொன்ன கழுமலத்துத் தூமணியே சம்பந்தா
நின்னருளே நற்றுணையா நின்று. (௧௦)

துணையொன்று மின்றுன் றுணையன்றியெந்தா
யணையவுனைநாளு மருளாய் — உணையுமெனை
வாவென் றழைத்தாலுன் வாய்முத்தஞ் சிந்திடுமோ
தேவருண் ஞானக்கன்றே தேர்ந்து. (௧௧)

அருள்பொழியுமேக மனையாய்நின்னுமங்
தெருளுட னிங்கோதுந் திறமே — மருளுடையேன்

கொண்டுயிர்வாழ்ந் துய்யக் கூறியெழிற்சம்பந்தா
பண்டைவினைமாயக் கண்பார். (௧௨)

பாராதியெட்டும் பரனார்திருவுருவென்
றோராதலையுமென்ற னுள்ளத்தே—நீரா
யுருக்கியமர்ந்தோங்கு மூவகையுடனாளுந்
திருக்கிளருநற்புகலித் தே. (௧௩)

தேவர்தொழுமுன்னடிகடேடிமகிழ்ந்தேதிரிவுற்
றுவிதரியேன்போலிங் காயினேன்—பாவிநான்
ஐயாபுகலிவளராரமுதேசம்பந்தா
மெய்யேமற்றேதுவெலாம்வீண். (௧௪)

வீணவலர்போல்வேன் விளம்புமாறுண்டோவுன்
ஞணமிலாதுன்னருளை நாடியே—கோணுமனத்
தீயனடல்வினையேன் சிந்தைமடவார்க்குடையே
னாயினேன்றென்புகலி யாய். (௧௫)

ஆராவமுதே யளவிலாப் பேறுதவுஞ்
சீரார்சிவநேசச் செல்வமே—வாராயோ
என்பானீவந்திங் கியம்பாயோநன்மொழியொன்
றன்பாற்சம்பந்தா வமர்ந்து. (௧௬)

சம்பந்தமுன்றன் சரணமேயல்லாமல்
சம்பந்தம்வேறுண்டோசம்பந்தா—நம்பும்
புகலியிடமேபுகலிடமென்பாருள்
ளகலிடமன்பாக வுவந்தாய். (௧௭)

தாயுந்தனையீன்ற தந்தையுமற்றைப்பெண்டி
ராயுமுடற்சார்பிங் கத்தனையு—நீயெனவே
நாடியுளம்பூப்பவருண் ஞானமருள்செய்யுமே
பாடிமகிழ்தேவாரப் பா. (௧௮)

தேவாரஞானச் செழும்பாடடும் வாசகமும்
நாவாரப்பாடு நலத்தவர்பா—லோவாமல்
நெஞ்சங்கசிந்துருகி நின்றிடவேசம்பந்தா
கஞ்சமலர்த்தாளருள்வாய் காண். (௧௯)

அருளேதிருமேனி கொண்டவரசே
பொருளேதுமின்றியுளம்பொங்கி—மருளேய்ந்
தழிபுமெனையாளாயோ வையாசம்பந்தா
விழிவிதெனவுள்ள மெணாதே. (௨௦)

எண்ணுடையமூவரிராக்கதர் தீயிற்பிழைத்த
தண்ணலாரின்னருளாலாகுமால்—கண்ணுதலெங்
காரணனாருள்ளங்கனியவருசம்பந்தா
பூரணனேபோற்றியுன்றன் பொற்பு. (௨௧)

போற்றியருட்குருவே போற்றிசிவசமயப்
பேற்றையுடையார் பெருவாழ்வே—சாற்றுசீர்
முத்திவடிவாகு மூர்த்தியேசம்பந்தா
வைத்தெனையாளுன்றாண் மலர். (௨௨)

மலமாயைகன்மமறு மாண்பருளுஞான
நலமேயருட்காழி நட்பே—சலமிலா
வின்பப்பெருமாட்சி யேயென்வினைதபுநற்
கன்றேயருள்சதங்கைக் கால். (௨௩)

காலனனிரோடா காயம்பிருதிவியா
வேலுமொராம்பூதங்க ளென்றேமுன்—மாலயனுங்
காணான்கலந்தவருட் காட்சியருள்சம்பந்தா
பேணாநின்றேனிங் கன்பே. (௨௪)

கன்மவினைதொடரார் காலன்வழியடரார்
ஜன்மவிருள்படரார் சார்வரால்—தன்மயமே
சீகாழிச்சம்பந்த தெய்வமேயென்பார்மற்
றாகார்துயர்க்கட லுளாழ்ந்து. (௨௫)

துயரக்கடல்கடத்துந் தோணியேதோணி
யியலுந்திருநெறிகோ லென்றும்—அயனன்
றடையுமருட்காழியநீ யஃதூர்வானாயின்
கடையனேற்கென்குறையாங் காண். (௨௬)

ஆகாமதங்க ளழித்தேயருள்விரவச்
சீகாழிவந்தருளுஞ் செல்வமே—போகாத்

துயரமொழித்ருமேதூயமணியே
யுயர்தருநின்போதமுணர்ந்தால். (உஎ)

போதசிகாமணியாம்புத்தமுதேயென்னுடைய
நாதனேசெம்மைநலத்தொன்றே – மேதகுசீ
காழியில்வாழ்மெய்ஞ்ஞானக்கற்பகமேகற்பனைசேர்
பாழில்விழுவேனைக்கண்பார். (உஅ)

பாரார்பதிநிலையும் பாசப்பசுநிலையுந்
தேரார்சிவஞானஞ்சிந்தியார் – தீரா
விடும்பைகூர்வாழ்விதமென்பாரோசம்பந்த
கொடும்பிழையாளர்குறித்து. (உகூ

குறிக்கும்பரசமயக்கோளரியார்பாசம்
பறிக்கும்பழமையருட்பாவார் – பொறிக்கும்பொற்
செம்மைமலர்ப்பதத்தார் சிற்றறிவினேனகத்தார்
அம்மைதரும்பாலமுதுண்டார். (ங0)

ஆராவார்நீயல்லாலையாவடியேற்குன்
பேராயிரமுமருட்பெற்றியோய் – நேராக
நெஞ்சங்கசிந்துளைசெய் வேனேநெடும்பொழில்வான்
மஞ்செய்துகாழியனேவாழ்ந்து. (ஙக)

எய்தும்பரசமயமெல்லாந்தணந்துண்மை
யெய்துஞ்சிவசமயமெய்தவே – செய்தனையே
புத்தமுதேகாழிப்பொலனகரிற்போந்துடைய
வுத்தமதேவேயென்பாலுற்று. (ஙஉ)

எந்தையேசீகாழி யேந்தலேபற்றெறிவார்
தந்தையேயென்பாற்றயைபுரியாய் – முந்தையோ
ருன்னையருச்சித்தேயுய்ந்தார்பெருஞ்சோணி
மன்னினைவாழ்த்தற்கெளிதாமா. (ஙங)

மால்சிவசாரூபமன்னினுன்சம்பந்த
னுலெனவிங்கேயாய்ந்தறியாதார் – மால்கொண்
டணவர்நறுந்துளவத்தானைப்பிறவிப்
பிணிதவிரப்பார்க்ககிலாப்பேர். (ஙச)

பேர்சிவசம்பந்தப்பெருமானமர்ந்திலகு
மூர்திகழ்சீகாழியெனவுடையான் - நீர்நிலனே
டெல்லாமவனுயிலகுமெழிற்கோலமே
யல்லாமல்வேறில்லையால். (௩௫)

இல்லையெனுநாத்திகர்பாலெய்தியவர்கூறுஞ்
சொல்லைநனிநம்பியிவண்சோர்ந்தலையும் - பொல்லாப்
புழுத்தலையேனும்போற்று வேனேசம்பந்தா
வழுத்தவருள்செய்திடநீவா. (௩௬)

நீவாதபமே நேயவடியாரிதயத்
தேவேயானந்தச்செழுந்தேனே - மூவா
முதலாமுதல்வர்தருமுத்துச்சிவிகை
அதிபாசம்பந்தாவருள். (௩௭)

பந்தமொழியார்பரிபவமாயார்தமது
சிந்தைமெலியத்தியங்குவார் - எந்தையெனும்
சம்பந்தனருளைச்சாரார்மலவிருளில்
வெம்புந்திறலுடையார்மேல். (௩௮)

மேல்கீழயன்மால்வெதும்பியுளந்தேடுறவப்
பாலெனவேநீண்டபரனர்தங் - கால்பரவாக்
கள்வனேனுய்யுங்கதியுண்டோசம்பந்தா
புள்வருசிகாழிபுரத்தோய். (௩௯)

தோயச்சடைமுடியான்றேகையொருபாலுடையான்
வீயச்சலந்தரனைவிட்டினன் - பேயுடனே
யாடுவான்மாமயிலையம்பதியிலென்பணங்காப்
பாடுவானீசம்பந்தா. (௪0)

வாதச்சமண்புத்தமால்பாஞ்சராத்திரமும்
பேதப்பயனுதவப்பின்னுளவுஞ் - சாதப்
பிணிப்பெனவேகண்டும்பிரியார்வினையாற்
கணிப்பார்தம்முட்காழியாய். (௪௧)

உட்சமயமாறுமுவந்தனையே நின்விளையாட்
டுட்சமையாராரிங்குளைபகராய்— சட்சமய

தாபிதனேபோற்றுந் தலைமைபெறுசம்பந்தா
சோபிதனேதேர்ந்தேனுன் சொல். (சஉ)

சொல்லாருஞானத்தெளிஞரோ யென்றுசொலும்
வல்லாளர்பாதமருவியே—நில்லா
வெனக்கும்வருமோவுன்ற னின்னருள்சம்பந்தா
மனக்கவலைமேற்கொள்ளாமல். (சங)

ஆமல்லவென்றே யறையுமவரவர்க்குப்
பூமானரீயாகிற் புனிதனே—தாமாக
வொன்றுமறியாராவ ருன்விளையாட்டேயாகு
மென்றறிவேன் சம்பந்தனே. (சச)

தன்னியராமெங்கடலைவனுர்சம்பந்தர்
பொன்னினடித்தாமரையைப் போற்றுவார்—மன்னிபெழு
மானந்தவெள்ளத்தழுந்துவார் வெம்பிறவி
யூனம்புகாமலுயிருய்ந்து (சரு)

காமனுடல்பொடியாக் கண்டவகண்டிதன்பால்
வாமத்தொருத்தியருள் வாய்க்குமே—சேமநிதிப்
பேறெனவேசம்பந்தப் பேரானையுட்டெளிமின்
கூறுவதாலுண்டோ குறை. (சசு)

குறையுண்டோகாழிக் குரவனடிப்பூ
நிறையுமதிகொண்டு நினையின்—இறையளவே
போதும்புகழ்க்கருணைப் புண்ணியனுர்சீர்ப்பதிக
மோதுந்தகுதியுளோர்க்கு. (சஎ)

ஓரார்மறைக்காட்டி லுற்றகதவடைத்த
தேராருந்தென்புகலி யெம்பெருமான்—பாரார்
பழவினையேதோய்வுற் றுழியாப்பவமா
மிழிவினைவந்தெய்து மிதனல். (சஅ)

நான்மறையின்மிக்க நலமுடைத்தாமாகமமெய்ந்
நான்முறைசொற்றுன்பாதநோற்றுளார்-கான்மனையிற்
பட்டபெரும்புகழைப் பாடுகிற்பார்சம்பந்தன்
மட்டவிழ்தாள்பெற்றார் மணந்து. (சகூ)

பெற்றலைநீர்வைப்பிற் பிறந்தங்கலமருவீர்
கொற்றவன்சிகாழிவருங் கோமானார்—பொற்றோர்
வடம்பிடிக்கவாருங்கோண் மாலயனுக்கெட்டா
விடம்பிடிக்கவேண்டுமெனிலின்று. (௫0)

இன்றேபசுமார்க்க மெம்பிரான்சம்பந்த
னன்றேயழியபத்தருளு மாற்றினால்—நன்றே
புகழ்மினவனருளைப் புன்சமயமற்றின்
றிகழ்வினிருந்தும் மில்லையால். (௫௧)

இல்வாழ்க்கைநன்றேயா மெய்தினியலெல்லா
மல்வாழ்க்கைகொண்டிங் கலைவதேன்—புல்வாழ்க்கை
நீத்தார்நெடும்பிறவி நேர்கிலர்மற்றெய்துவார்
பூத்தார்ச்சம்பந்தன் புகல். (௫௨)

பந்தர்சிவிகைபரனார்கொடுத்திடவன்
றந்தமுடன்பெற்றவழகனே—சுந்தரஞ்சேர்
பால்வடியுநின்முகநான் பார்த்திருக்கச்சம்பந்தா
கால்படியவந்தருளிக்கா. (௫௩)

இக்குமொழிப்பேதையர்பாலெய்தியவரின்பம்
பக்குவமென்றுன்னிப் பருகுவேன்—அக்கரவஞ்
சூடும்பிரானருளிற் றோய்வனேசம்பந்தா
கூடவேயெற்குனருள்கூர் (௫௪)

கூர்வேன்மறைத்துக் குருவடிவங்கொண்டுதித்த
சீர்சால்புடையசிவக்கன்றே—யார்பாற்றான்
சென்றென்குறைபகர்வான் சேர்ந்திடுவேன்சம்பந்தா
நன்றருளுன்பொன்னருளிங் நாள். (௫௫)

நாளவலமேபோக்கி னுருன்னலனறியாக்
கோளர்மிகுந்தீவினைகைக்கொண்டே—காளிநகர்ச்
சம்பந்தநாமத் தனியே தனிமுதலே
யெம்பந்தந்தீர்ப்பா ரெவர். (௫௬)

ஆயுநிகமா கமங்களருள்விரவும்
வாய்மைவளநீறு மாமணியுந்—தூயவெழுத்

தைந்தும்புகலியிலேயன்புடனீதோன்றாக்கா
லெந்தாயென்னுமோ விசை. (௫௭)

தாமதமார்க்கத்தார்சமயச்சழக்கொழியார்
தாமதமாவாருன்னைச்சார்கிலார் – சேமப்
புறவத்திருநகர்வாழ்புண்ணியனேயென்னு
ளுறவுற்றருள்வாயுகந்து. (௫௮)

உகமெண்ணிறந்துமுலவாத்தென்காழி
யகமன்னுஞானவரசே - தகவுன்னு
மோத்தூரிலாணிற்பொலியுமுயர்பனைபெண்
ணாத்தமிழ்சொற்றாயுளத்தேயண்ணா. (௫௯)

உளவறிவாருன்னை யுகப்பரோயன்றி
யுளவறியாருன்னை யுகவார் - உளவீதங்
கன்றுன்றிருமணத்தி லார்ந்தபேர்சம்பந்தா
துன்றினர்காண்சோதியிடந் தோய்ந்து. (௬௦)

இடபமூர்நம்ப ரிடமகலாளம்பொற்
குடமுலைப்பாலுண்ட குழந்தாய் - செடிசேர்
மறமலியும்வன்னெஞ்சக் கள்வனேனுய்யுந்
திறமுண்டோநின்றாள்செறிந்து. (௬௧)

தாளானடியர்படுந் தாபந்தகவருடங்
தாளானவலர்தமையாளுமலர்த் - தாளாளன்
சம்பந்தாவென்று தணவாப்பெருங்கேண்மை
யின்பந்தாவென்பார்க் கிசைந்து. (௬௨)

இன்பங்கடந்தவிடத்தே யிருத்துமோ
வன்பிற்பழுத்தமனத்தேனைச் - சண்பைக்
கொருமூன்றுலகு முணர்த்துங்கருணைக்
குருராயனாம்புகலிக் கோ. (௬௩)

புகலிநகர்போந்தென் புன்மைதவிர்த்தாளும்
பகவன்பகவதிபால் வந்த – சுகசொரூப
ஞானவிளக்கே நமச்சிவாயப்பொருளே
மோனநிலைசற்றே மொழி. (௬௪)

சற்றேபதைக்கத்தரினுஞ் சகம்படைக்கக்
கற்றனுங்காலனுமா மென்றே – சொற்றார்க்
கெழுமன்பிலேனிங்கிடராற்சம்பந்தா
கழிவனோநாளுங் கதித்து. (௬௫)

கதிநின்கமலக்கழலல்லால்வேறு
கதியறியேன்காழிக் கடலே - துதிமேவு
மாமறைகள்போற்று மறைஞானசம்பந்தச்
சேமநிதியேயுன் சீர்தேர்ந்து. (௬௬)

தேருங்கலைஞானமெல்லாந் தெளிந்தபெரி
யோர்தம்பெருமை நலத்தொன்றே - வாரார்
முலைமடவாரின்பமே முத்தியென்பார்பாழ்வாய்க்
கிலையோசம்பந்தா விடர். (௬௭)

பந்தார்விரலுமையோர் பங்குளார்மெய்யன்பிற்
சிந்தாநெறியுலகிற் செப்பினன் – செந்தா
மரைமேலவனுள்ள மாசுபறித்தாளும்
பரைகான்முளைசம்பந்தன். (௬௮)

காழிப்பதியின்கௌணியனார் பொன்னடிகள்
வாழிகண்டாயென்றுவழுத்துகேன் - ஆழியூர்
தோணிபுரங்கொண்டெந் துரிசறுத்துவண்கயிலை
காணியெனக்காட்டுதல் கண்டு. (௬௯)

கண்டேகரும்பின்சுவையே கனிரசமே
தண்டாமரைத்தடஞ்சூழ் சண்பையில்வா – ழெண்டோளன்
கந்தமலர்ப்பாதங் கண்டணையுஞ்சம்பந்தா
அந்தமிலாவன்பெற் கருள். (௭௦)

அந்தணர்கள்போற்று மரசேசிகாழிவரு
சுந்தரனேயெங்கடுணைவனே – மந்திரமாம்
பஞ்சாக்கரப்பதிகம் பாடினையே யெம்போல்வார்
நெஞ்சாற்றியானிக்க நேர்ந்து. (௭௧)

நெரில்சிவபாதநெஞ்சுடையா ரொன்றுபொரு
ணேருமவருளங்கொணேயவருட் – சீரார்

புதல்வனெனவருநின் பொன்னருளாம்வெள்ள
மதுதோய்கிலேனருள்வாய் மற்று. (எஉ)

மதுரைவளம்பதியை மன்னியெழினீற்றுத்
துதிபதிகமோதுந் துணையே - விதுகதிர்தீக்
கண்ணுனுளங்கதித்த காளையேயென்றுன்னை
நண்ணுகிற்பேனென்று நான். (எ௩)

நாடவயலுண்டோ நன்னெஞ்சேநான்மறைகள்
பாடுமெழிற்சம்பந்தன் பாதமலர் - கூடுகிற்பார்
எம்மடிகளாமவர்பா லேவலிசைகிற்பார்
பொய்ம்மைநிரலேமாய்ந்து போம். (எ௪)

போமேபுலன்வழியிற் போகுமவாவைந்து
மாமேதிருவருளுமன்பரிவர் - தாமேயா
மென்னுமபிதான மெய்துமேசம்பந்தன்
பொன்னடிசிந்திப்போர்களுக்கு. (எ௫)

போருருமேரகமும் போற்றுதிருவேங்கடமுந்
தேருருஞ்செந்திறிருத்தணிகைச் - சீருரும்
வீற்றிருந்தஞான விளக்கேவியன்காழித்
தேற்றமேநன்றருளிச் செய். (எ௬)

செய்வானுஞ்செய்பொருளுஞ் செய்யப்படுவானும்
பெய்வானுமாரியெனப் பேரருளைக் - கொய்வானும்
மாயாமலவிருளை வந்தென்னகம்புகுவான்
றுயாம்புகலிநிதி தான். (எஎ)

நிதியென்றெவருநெருங்கியுறவாடும்
பதியாம்புகலிப்பரமன் - மதியுடையார்
கண்ணிற்கருமணிபோல் வான்மற்றென்கண்ணனையான்
றண்ணருளென்பாலுண்டோ தான். (எஅ)

உண்டோசிவஞான முண்டதிருச்சம்பந்தன்
பண்டாமலரடிமெய்ப்பத்தியார்க் - கொண்டா
மனாயோன்வகுத்த விதிமற்றவனே
யருணுடிகிற்பதனு லாங்கு. (எ௯)

நாலுமுகனுர்க்கிளைய ஞானவருட்செல்வமே
நாலுமுகனுக்கருளு நம்பனே - நாலுமுக
நாடுங்கழுமலத்து நாயகமே நின்னருளை
நாடுங்கிழமையருணன்று. (அ0)

அருளாலேயுன்னை யணைவார்பிறவி
மருளான்மதிமயங்கு வாரோ - அருளாளா
நாயிற்கடைப்படுமென் மாட்டுநயந்தின்ற
தாயிற்பேராதருணீ தான். (அக)

நீதாசிகாழிநிமலா சிவங்கமழும்
போதாபுராண புனிதனே - நாதா
பரம்பூத்தஞான் பரமகுருவேயென்
னுரம்பூத்தலென்றுள் ளுவந்து. (அஉ)

வந்தார்மலரோனும் வாசவனுமாலவனுங்
கொந்தார்மலர்சொரிந்து கூப்பியே - தந்தங்
கரங்கள்சிரங்கொள்வர் காழிச்சம்பந்தா
வரங்கணீதந்தருளு வான். (அங)

வானோரகமகிழ்ந்து வாழ்த்தத்திருமருகல்
மேனாள்விடந்தீர்த்த வித்தகநீ - நானுந்
துவிதப்பிழையொழிக்குஞ் சோதிவடிவே
எவிதத்தானீடேறு வேன். (அச)

ஏற்றுக்கொடியுயர்த்த வெம்மானைக்காட்டுதியோ
கூற்றிடத்திலென்னைக் கொடுத்தியோ - சாற்றரிய
தென்கழுமலப்பதியிற் சேர்த்தியோசம்பந்தா
என்செய்வாயுள்ள மியம்பு. (அரு)

என்றுமொழியா விருநிதியேதென்காழிக்
கன்றேநின்சீராக் கருதாதார் - பொன்றுங்கால்
அந்தோபரிதிமகனுர்க்கென் செயற்பாலா
ரெந்தாய்சம்பந்தா வினி. (அசா)

தாரமர்பூங்கொன்றைச் சடையானிடம்பூத்த
வேரமரும்பூங்கொடியா ரீந்தருளுஞ் - சீரமைந்த

பாலமுதமுண்டபரம்பொருளே யேழையேன்
சீலமிகவருணிற் சேர்வு. (அஎ)

சீலம்பெரிதுடைய தேவேசரண்மேவித்
தாலம்புகழ்காழிச்சம்பந்தா – கோலஞ்சேர்
வேள்பணியும்பேரழகா வேதியாநின்மலர்ப்பூந்
தாள்பணிவேனோ சிறியேன்முன். (அஅ)

பணியகிலாருன்னைப் பதிதராவாரொன்
றெணியறிஞர்போற்று மியறோர்ந் – தணிதருசீ
காழியனேபோதிற்பொலியுங் கழலிணையே
வாழியுளாத்தேனுண் மகிழ்ந்து. (அகூ)

மகிழ்பூத்தஞான மடவாள்புணர்ந்த
விகழ்பூத்தவென்னுள்ள மெய்தும் – புகழ்பூத்த
கற்பகமேகாழிக் கவுணியர்தங்கண்மணியா
மற்புதனேயெந்துணை யென்னில். (கூ0)

துணையேயென்றுன்னைத் துதித்தார்சிரல்லா
லுணையேன்பெருங்காழி யுற்றாய் – பிணைசேரும்
பாற்படுநெய்போலும் பரிசொருவனுண்மையையென்
பாற்படவிந்நாள்கண் பாராய். (கூக)

நாளாகிமாதமாய் நல்வருடமாயினைய
கோளாகியல்லவாய்க் கூறுநசைக் – காளாகி
மாயும்வினைவலியேன் மாகாழிச்சம்பந்தா
ஏயுநினைப்பெறுவே னென்று. (கூஉ)

வேனோக்குடையார்தம் மேலேவிருப்பமுடன்
ஞானாகாரத்தினிலே நாடிடா – தூனடிப்
போய்வருவதேதொழிலாய்ப் போந்திழிந்தேன்சம்பந்தா
தோய்வினையான்மேனாளந்தோ. (கூரு)

அந்தோதென்சிகாழி யார்பழிச்சும்போரேறு
கொந்தார்விரைமலர்த்தாள் கூடியே – சிந்தா
குலந்தவிராப்பாழ்நெஞ்சே கூட்டுங்கருணை
நலந்தவமே யென்பதினி நாடு. (கூச)

நாடுநலமெவையு ஞானசம்பந்தன்முனம்
பாடுந்திருப்பதிகம் பாடுவார் - கூடும்
பரிசிறப்பிழைபடுமோ பாடியேமாலன்
றொருசிவமுற்றுணோரு மின் (கூரு)

மின்னார்கலவியிலே வீழ்ந்துதடுமாறுமெனக்
கன்னேசிவஞான வாரமுதைக் – கொன்னே
யளித்தனையேசம்பந்தா வன்பனேனுள்ளங்
களித்தனனேநின்னருளைக் கண்டு. (கூசா)

கண்டங்கரியபிரான் கான்மலரைவாழ்த்தகிலாக்
கண்டகரையன்று கழுவிட்ட – கண்டமய
சின்மயஞானாகாரச் சீராளனாய்வருவான்
றன்மயன்காழிச் சம்பந்தன். (கூஎ)

மயலில்லாரஞ்ஞை மறமில்லார்வேறு
செயலில்லாருண்மையே சேர்வார் - பயமில்லார்
சம்பந்தன்போற்றுஞ் சமயம்புகுந்தடைவார்
சம்பந்தனத்தனிணைத் தாள். (கூஅ)

அத்தத்தொளிரத்தத்தா லமைத்ததாளநிலை
வைத்தருளுஞ்சீகாழி வள்ளலே – முத்துச்
சிவிகையரத்துறையிற்பெற்ற சிவக்கன்றே
செவிகையெலாநின்பணி செய்யும். (கூகூ)

செய்வதறியாச்சிறியேனிடருழந்து
நைவதறிந்திலையே நாயகனே - சைவநெறி
பாடிலுயர்நெறியென் றுண்மைபகர்சம்பந்தா
தேடித்தேர்ந்துய்குவனுன் சீர். (க00)

வாழ்த்து.

வாழிமறையாகமஞ்செந்தமிழ்வேதம்
வாழிசிவசமயம்வாழியே - காழிநகர்
வந்தகுருமணிதாள் வாழியருளுமையோ
டெந்தைபிரான்றானு மிசைந்து.

ஆளுடையபிள்ளையார்
திருவடிவாழ்க.